1993 மார்ச் 30]

175—

ஒரத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*11084—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் கிராமங்களிடம் இருந்து அக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய வேளாண்மை குழுவின் பரிந்துரைகளின்படி, 10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் துவக்கப்படுகிறது. ஒரத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் கால்நடைகள் 3,000-க்கும் குறைவாகவே உள்ளதால், பூதலூர் ஒன்றியம், ஒரத்தூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-40

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறினார்கள். அங்கே பல ஆண்டுக் காலமாக கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கருதி அந்த கிராம மக்கள் அரசுக்கு விண்ணப்பம் செய்து உள்ளார்கள். அந்தப் பகுதியில் பல்வேறு கிராமங்கள் இணைக்கப்பட்டு, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கால் நடைகள் அங்கே இருக்கின்றன. அவைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் தொலை தூரத்திற்குச் சென்று அவைகளுக்கு மருத்துவம் செய்ய வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தால் அந்த மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தூர் பகுதியில் மூன்றாயிரம் கால் நடைகள் இருப்பதாக கணக்கெடுத்து இருக்கிறார்கள். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற கால் நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்று வலி யுறுத்தி வந்திருக்கிறார்கள். தமிழகத்திலேயுள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிக்கக் கூடிய தன்மையில் அரசு திட்டம் தீட்டி வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனை அமைக்காவிட்டால் ஒரு மருந்தக மாவது அதாவது சப்-சென்ட்டராவது அமைப்பதற்கு அரசு முன் வருமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு வேண்டிய பதில் வருகின்ற மானியக் கோரிக்கையின் போது அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 176, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

176—

பூம்புகார் தொகுதியில் கால்நடைப் பண்ணை அமைத்தல்.

*16868—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கால் நடைப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் இல்லை.

(ஆ) என்வே இவ்வினாவிற்கு விடையில்லை.